மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

மடத்துக்குளம்

அசல் வழக்கு எண்.146/2019

இன்று 2022 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது பிரிவு ஏற்பாட்டின் படி ) திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி (Pw1) |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | நாகராஜன் |
| வயது | : | 49 |
| கிராமம் | : | காரத்தொவு |
| தொழில் | : | |
| வட்டம் | : | மடத்துக்குளம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வழக்கு விபரம் தெரியும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். வா.சா.ஆ. 1– 13.06.2012 தேதியிட்ட என் கணவர் நாகராஜனுக்கு பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல், வா.சா.ஆ. 2– 10.01.2015 தேதியிட்ட வரி ரசீது அசல், வா.சா.ஆ. 3– 03.01.2017 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல், வா.சா.ஆ.4– 2005–2009 ஆண்டிற்கான குடும்ப அட்டை அசல், வா.சா.ஆ. 5 – என் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), வா.சா.ஆ.6– 14.12.2016 தேதியிட்ட வழக்கு சொத்து குறித்து வில்லங்க சான்று, வா.சா.ஆ.7–

24.11.2015 தேதியிட்ட செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்/–திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்